BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# இந்த விடுமுறைப்பருவத்தில் தீயினால் ஏற்படும் ஆபத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கும்படி ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு நினைவூட்டுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 15, 2021) – விடுமுறை நாட்கள் மிக சமீபமாக வந்துவிட்ட நிலையில், தீயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதை தங்கள் தலையாய கடமையாக ஒவ்வொருவரும் கருத வேண்டும் என்பதை, ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு ஊக்குவிக்கிறது.

- நிஜமான கிறிஸ்துமஸ் மரங்களுக்கு நீர் ஊற்றி மரத்தின் அடிப்பாகம் நிறைய தண்ணீர் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும்
- உங்களுடைய சொந்த மற்றும் உங்கள் விருந்தினர்களின் பாதுகாப்பிற்காக, குடும்பங்கள் கூடி மகிழ்வதற்கு முன்பாகவே, அனைத்து புகை மற்றும் கார்பன் மோனாக்ஸைடு வாயு கண்டறியும் அலார சாதனங்கள் வேலை செய்கின்றனவா என சோதித்து விடவும்
- விடுமுறைக்கால அலங்கார விளக்குகள் அவற்றுக்கென நீட்டிக்கப்பட்ட மின்சார கம்பிகள் அனைத்தையும் சோதித்து அவற்றுக்கு அதிக சுமை ஏறாமல் இருப்பதை உறுதி செய்யவும்; அவை உரிந்து பிரிந்து இருந்தாலோ அல்லது சேதமாகியிருந்தாலோ அகற்றிவிடவும்
- வெப்பமூட்டும் சாதனங்கள், எரியும் மெழுகுவர்த்திகள் போன்ற சுவாலைகள், அடுப்பு அல்லது கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஹீட்டர் ஆகியவற்றில் இருந்து, அனைத்து அலங்கார பொருட்களையும், குறைந்தது 1 மீட்டர் (3 அடி) தூரம் தள்ளி வைக்கவும்
- ஒரு அறையை விட்டு வெளியேறும்போதோ அல்லது உறங்கச் செல்லும் முன்பாகவோ எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தி ஏதேனும் உள்ளதா என பார்த்துச் செல்லவும்; மாறாக பேட்டரியினால் ஒளிரும் விளக்குகளை உபயோகிக்கவும்
- வீடுகளில் தீப்பிடிப்பது என்பது பெரும்பாலும் சமையல் செய்யும்போதுதான் ஏற்படுகின்றது. சமையல் செய்யும்போது சமையலறையிலேயே இருக்கவும் மற்றும் கவனச்சிதறலைத் தவிர்க்கவும்.

இந்தப் பருவத்தின்போதும்கூட, கோவிட்-19 க்கு எதிரான போரில் சுவாதீனமாக இருக்குமாறு ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு குடியிருப்புவாசிகளுக்கு நினைவு படுத்துகிறது; நல்ல கை சுகாதாரத்தைப் பேணுவது, உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் சமூக இடைவெளி விடுவது மற்றும் இந்த இடைவெளியைப் பேண முடியாத இடங்களில் முக கவசம் அணிவது ஆகியவற்றைத் தொடரவும்.

விடுமுறை நாட்கள் முழுவதற்குமான தீப்பாதுகாப்பு பற்றிய குறிப்புகளுக்கு ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பினை Twitter, Facebook, மற்றும்YouTube ஆகியவற்றைப்

பின்பற்றவும் அல்லது அவர்களின் 12 நாட்களுக்கான தீ பாதுகாப்பு பற்றி அறிய வருகை தரவும்: bramptonfire.com.

**அறிஞர் கூற்றுக்கள்**

"அனைத்து ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களும் விடுமுறையைப் பாதுகாப்பாகக் கொண்டாடுமாறு நான் ஊக்குவிக்கிறேன். இது குடும்பம் மற்றும் கொண்டாட்டத்திற்கான சமயமாகும், மேலும் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவை அமைப்பினரின் இந்த முக்கியமான உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம், இது பாதுகாப்பானது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாகும். ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பின் 12 நாட்களுக்கான தீ பாதுகாப்பு உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம், இந்த விடுமுறைக் காலத்தில் உங்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கலாம். இந்த ஆண்டு விடுமுறை நாள் விஷயங்களுக்கான பட்டியலில் *தீ பாதுகாப்பை* முதலிடத்தில் வைக்குமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமூக சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"மற்றொரு சவாலான ஆண்டிற்குப் பிறகு, விடுமுறை நாட்களில் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் இணைவதை நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த சமயம் வேடிக்கை மற்றும் பண்டிகைகள் நிறைந்ததாக இருந்தாலும், தீயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதுவும் முக்கியமாகும். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பான பண்டிகை மற்றும் விடுமுறைக் காலத்தை உறுதிசெய்ய, எங்கள் விடுமுறைக்கால தீ பாதுகாப்பு குறிப்புகள் அனைத்தையும் மீள்பார்வையிட bramptonfire.com க்கு வருகை தரவும்.

*- பில் போயெஸ், தீயணைப்பு துறைத் தலைவர், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca